சுருக்கம்

தொழில் துறை – தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம் – மென்பொருள் தொழில் நுட்பப் பிரிவின் சேவை மையம் மேம்படுத்துதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

<u>தொழில் (எம்.ஐ.டி.2)துறை</u>

**அரசாணை (டி) எண்: 108** **நாள்:25.07.2014**
**ஜய, ஆடி 9,**
**திருவள்ளுவர் ஆண்டு –2045**

**ஆணை:**

24.07.2014 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம் தொடர்பான கீழ்க்கண்ட அறிவிப்பினை வெளியிட்டார்கள்:-

> "தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனத்தின் மென்பொருள் தொழில்நுட்பப் பிரிவின் சேவை மையம், அந்நிறுவனத்தின் தற்போதைய தேவைக்கு ஏற்ப 12 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும் என்பதை மட்டற்ற மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்."

2. மேற்கண்ட திட்டத்தினை தனது சொந்த நிதியிலிருந்தே குறிப்பிட்ட கால அளவிற்குள் நடைமுறைப்படுத்தவும் மற்றும் இத்திட்டத்தின் முன்னேற்றம் குறித்து மாதந்தோறும் அரசிற்கு அறிக்கை அனுப்புமாறும் தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனத்தை அரசு பணிக்கிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**ச. வி. சங்கர்**
**அரசு முதன்மைச் செயலாளர்**

பெறுநர்
தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும்
காகித நிறுவனம்,
கிண்டி, சென்னை– 32
நகல்
தொழில் (வ.செ.தி.) துறை, சென்னை – 9
சிறப்புத் திட்டங்கள் மற்றும்
அமலாக்கத் துறை,
சென்னை– 9
கோப்பு நகல்/உதிரி நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்
28/7/14